கைலாசபதி கலையரங்கை பதிவுசெய்வதற்கான விதிமுறைகள்

1. கைலாசபதி கலையரங்கானது சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே பாவனைக்கு அனுமதிக்கப்படும்.

2. கலையரங்கினை ஆகக்குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கும் ஆகக்கூடியது எட்டு மணித்தியாலங்களிற்கும் பதிவு செய்ய அனுமதிக்கப்படும்.

3. மண்டபத்திலுள்ள மின்சார உபகரணங்களை /ஆழிகளை, குறிப்பாகக் குளிரூட்டிகளை கையாளுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

4. கலையரங்கு மற்றும் அரங்கிலுள்ள அசையும், அசையா சொத்துக்களிற்கு எவ்வித சேதமேற்படுத்தலாகாது. கலையரங்கிலுள்ள பொருட்களுக்கு சேதம் ஏற்படின் விண்ணப்பதாரரே பொறுப்பாளியாவார். நிகழ்வு நடைபெறும் போது மண்டபத்திலுள்ள பொருட்களுக்கோ / மண்டபத்திற்கோ சேதம் ஏற்படுத்தப்படின் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தில் இருந்து அதன் பெறுமதியானது கழிப்பனவு செய்யப்படும்.

5. கட்டண விபரம்

பல்கலைக்கழக சமூகம் சார் அமைப்புகள்

| | | |
|---|---|---|
| முதல் இரண்டு மணித்தியாலங்கள் | - | Rs. 6000.00 |
| மேலதிக ஒவ்வொரு மணித்தியாலம் | - | Rs. 6000.00 |

6. கட்டணக் கொடுப்பனவுகளைப் பல்கலைக்கழக நிதிக்கிளை, சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது பல்கலைக்கழக மக்கள்வங்கிக்கிளையின் கணக்கு இலக்கத்திலோ 162-1-001-6-0000880 மேற்கொள்ளமுடியும்

7. மண்டபத்தினுள் சிற்றூண்டிகள், பானங்கள் பரிமாறப்படுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

8. இலங்கை மின்சார சபையின் மின் விநியோகம் தடைப்படும் பட்சத்தில் அரங்கிலுள்ள ஒலி அமைப்புகள், மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் மட்டும் இயங்க வைப்பதற்கு மாற்று நடவடிக்கை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும். குளிரூட்டிக்கான மின்சாரம் வழங்கப்படமாட்டாது.

9. மண்டபத்தினுள் தீ உண்டாக்கும் மெழுகுதிரி, தீப்பந்தம் மற்றும் இதர தீ விளைவுகளை கொழுத்துதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அரங்கிலுள்ள திரைச்சீலைகள், இலகுவில் தீப்பற்றக் கூடியதாகையால் இந்த ஏற்பாடு இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும். அத்துடன் அரங்கில் திரைச்சீலைகளை அகற்றுதல், சுவர்களில் ஆணி அடித்தல் போன்ற உள்ளக அமைப்பு மாற்றங்கள் எவையும் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது.

10. நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு மண்டபத்தைப் பதிவு செய்வோர் நிகழ்ச்சி முடிவடைந்ததும் உடனடியாக தாம் கொண்டு வந்த பொருட்கள் அனைத்தையும் அகற்றவேண்டும்.

11. முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்ள விண்ணப்பிப்போருக்கு இரவு 7.15 க்கு மேல் மண்டபத்தில் அலங்கரிப்பு வேலைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது.

பீடாதிபதி